**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 140/2017**

20.02.2025

**வா.சா. 1 உமா க/பெ. முத்துசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கின் எண் என்னவென்றால் அசல் வழக்கு எண் 140/2017 ஆகும். அதை யார் தாக்கல் செய்தது என்றால் எனது தகப்பனார் தாக்கல் செய்தார், யார் மீது தாக்கல் செய்தார் என்றால் தாமரைசெல்வி , சிவவடிவேல் , சுசிலா, பன்னீர்செல்வம் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு என் தகப்பனார் தாக்கல் செய்தார் என்றால் வழக்கு சொத்தை கிரய ஒப்பந்தம் போட்டிருந்தோம் அந்த கிரய ஒப்பந்தம்படி கிரயம் எழுதித்தர வழக்கு தாக்கல் செய்தார். நான் அரசு உயர்நிலைப்பள்ளி (மழவராயன் நல்லூர் ) ஆசிரியராக பணிபுரிகிறேன். நான் எப்போது அரசு பணியில் சேர்ந்தேன் என்றால் 2012 ல் சேர்ந்தேன். எனக்கு 2015 ல் திருமணம் ஆனது. திருமணமாகும் வரை எனது தகப்பனாருடன் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நான், எனது தங்கை மற்றும் தம்பி ஆவோம் . பங்கஜம் எனது தாயார் ஆவார். எனது தகப்பனார் 30.03.2018 ல் இறந்தார். எனது தகப்பனார் அரசு ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுப்பெற்றிருந்தார். எங்களது சொந்த ஊர் கூத்தாநல்லூர் தாலுக்கா , வடமேற்குடி எனது தகப்பனார் இறக்கும் வரை அவரது வரவு செலவு பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் ஊரில் வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்துவந்தார் என்றால் அவ்வாறு அவர் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. 05.06.1995 ல் எனது தகப்பனார் இரண்டு நிலங்களை சிவவடிவேல் தாத்தா வெங்கடசாமி மற்றும் சிவவடிவேல் அப்பா பாலசுப்ரமணியன் ஆகியோர்களிடமிருந்து சர்வே எண் 45/1 மற்றும் 55/1 நில கிரய ஒப்பந்தம் செய்து விலைக்கு வாங்கினார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S
MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.02.25 15:30:21 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.